**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

# மழைநீர் தொடர்பான தேசியக் கொள்கை

**வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு**

"செத்சிறிபாய"

பத்தரமுல்லை

பொருளடக்கம்


**01.** அறிமுகம் ........................................................ 1

**02.** கொள்கையின் அடிப்படை மற்றும் பண்புகள் ........................................................ 3

- **2.1** கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள். ........................................................ 3
- **2.2** கொள்கைப் பிரகடனம் ........................................................ 4
- **2.3** கொள்கையின் நோக்கங்கள் ........................................................ 5
- **2.4** கொள்கை இலக்குகள் ........................................................ 6

**03.** கொள்கையின் நோக்கெல்லை மற்றும் பொருத்தப்பாடு ........................................................ 6

**04.** நடைமுறைப்படுத்தல் மூலோபாயங்கள் ........................................................ 8

**05. தரப்பினர்** ........................................................ 10

**06. சட்டவாக்க ஆதரவு** ........................................................ 10

## 01. அறிமுகம்

"வானிலிருந்து விழும் ஒரு துளி நீரைக்கூட மனிதனின் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தாமல் வீணாகக் கடலைச் சென்றடைய விடமாட்டேன்" என்று கூறிய மகா பராக்கிரமபாகு மன்னனின் என்றென்றும் நிலைத்திருக்கும் ஞானத்தினால் ஈர்க்கப்பட்ட இலங்கை, மழைநீரை அத்தியாவசியமான தேசிய வளமாகப் பண்டைக் காலம் முதலே இனங்கண்டு வந்துள்ளது.காலநிலை மாற்றங்களின் அதிகரிப்பு, நீர்ப் பற்றாக்குறை மற்றும் நீர் வளங்களுக்கான தேவை உயர்ந்து வரும் சூழ்நிலையில், மழைநீர் சேகரிப்பை (RWH) ஊக்குவித்தலும் நடைமுறைப்படுத்தலும், நீர்ப் பாதுகாப்பு, காலநிலை மீளெழுச்சித் திறன் மற்றும் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான முக்கியமான தேசிய முன்னுரிமையாக மாறியுள்ளது.

இலங்கையின் புவியியல் அமைவிடமும் மத்திய மலைநாட்டின் அமைவிடமும் காரணமாக, மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை செயற்படும் தென்மேற்குப் பருவமழையினாலும், டிசம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை நிலவும் வடகிழக்குப் பருவமழையினாலும், அவற்றுக்கு இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் இரு இடைப்பருவ மழைக் காலங்களும் இலங்கைக்குக் கிடைத்துள்ள இயற்கை வரப்பிரசாதங்களாகும்.நாடு முழுவதும் மழைவீழ்ச்சியின் அளவு, தீவிரம் மற்றும் பருவகாலப் பரவல் குறிப்பிடத்தக்க அளவில் வேறுபட்டாலும், இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் ஆண்டுதோறும் மழைவீழ்ச்சி கிடைப்பதால், மழைநீரானது அனைத்து காலநிலை வலயங்களிலும் தொடர்ந்து கிடைக்கக்கூடிய இயற்கை வளமாக மாறியுள்ளது.எனினும், உலகளாவிய ரீதியிலும் உள்ளூர் ரீதியிலும் அவதானிக்கப்பட்டு எதிர்வுகூறப்பட்டுள்ள இயற்கை நிகழ்வுகளின் எதிர்காலத் தீவிர காலநிலை மாற்றங்களின் தாக்கம் காரணமாக, இது தொடர்பில் நாம் திருப்தியடைந்து விட முடியாது.

பருவகால மற்றும் பிராந்திய வேறுபாடுகள், தாழ்நிலப் பகுதிகளை முறையற்ற வகையில் நிரப்புதல் மற்றும் இயற்கை வடிகால் வழிகளை அடைத்தல் போன்ற ஒழுங்கற்ற நில முகாமைத்துவ நடைமுறைகள், இவ்வியற்கை வளத்தைச் சேமித்து வைத்து படிப்படியாக வெளியேற்றுவதற்கான போதிய பொறிமுறையின்மை, அத்துடன் மனிதனால் வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் சில செயற்பாடுகள் மற்றும் கவனக்குறைவான தவறுகள் ஆகியவற்றின் காரணமாக, கணிசமான அளவிலான நீர் மேற்பரப்பு நீராக மாறி விரைவாகக் கடலைச் சென்றடைவதுடன், அதேவேளை ஆவியாகவும் மாறுகின்றது.இத்தகைய செயற்பாடுகள் நீர் நெருக்கடியினை (Water Stress) ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன.

நாட்டின் சில பகுதிகளில் மழைவீழ்ச்சிப் பற்றாக்குறை காரணமாக வறட்சி நிலை ஏற்படுவதுடன், அதேவேளை வேறு சில பகுதிகளில் அதிகளவான மழைவீழ்ச்சி காரணமாக வெள்ளப்பெருக்குகளும் ஏற்படுகின்றன. இதன் காரணமாக, பெருமளவில் பாய்ந்தோடும் மழைநீரை (Storm Water) முகாமைத்துவம் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அவ்வாறு செய்யத் தவறும்போது, தாழ்நிலப் பகுதிகள் நீரில் மூழ்குவதுடன், பயன்பாட்டிற்கு

உட்படுத்தப்படாத மேற்பரப்பு பாய்ந்தோடும் நீர் (Runoff) பெருமளவில் இந்தியப் பெருங்கடலில் கலந்து வீணாகின்றது.

கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் தேவைகள், அனைத்து விலங்கின மற்றும் தாவர சமூகங்களின் தேவைகள், அத்துடன் ஏனைய உயிரினங்களின் தேவைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதற்கும், ஆண்டு முழுவதும் நியாயமான முறையில் நீரைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கும் போதுமான அளவு நீரை வழங்குதல் மற்றும் மிகை நீரை அகற்றுதல் ஆகியவற்றில் காணப்படும் சவாலானது, இலங்கையின் தீர்மானம் எடுப்பவர்களால் எதிர்கொள்ளப்படும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

மழைநீரைச் சேமித்து வைப்பதற்கான மண்ணின் இயற்கையான நீர்த் தக்கவைப்புத் திறனைக் குறைக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளால் ஏற்படும் பாதகமான சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை இலங்கை அரசு இனங்கண்டுள்ளது. இதன் விளைவாக, அவ்வப்போது ஏற்படும் வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்குகளால் மக்கள் பாதிப்புக்குள்ளாவதுடன், குறிப்பிடத்தக்க பொருளாதார இழப்புகளையும் எதிர்கொள்வதோடு, பின்னர் மேற்கொள்ளப்படும் நிவாரண நடவடிக்கைகளுக்காக அதிகளவான கிரயத்தினையும் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.இதுவரை பாரம்பரிய, மையப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள நிலையில், மாற்று அணுகுமுறைகள் மீது ஒப்பீட்டளவில் குறைந்த கவனமே செலுத்தப்பட்டுள்ளது.எனவே, நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆண்டுக்கு 750 மி.மீ. முதல் 6000 மி.மீ. வரையிலான மழைவீழ்ச்சி நிலவுவதாலும், அதன் காலரீதியான மற்றும் பருவகால மாறுபாடுகள் அதிகமாக இருப்பதையும் கருத்திற்கொண்டு, நீர்ப் பற்றாக்குறைக்கும் நீர் மிகைக்கும் இடையிலான இடைவெளியை நிர்புவதற்காக சேகரிக்கப்பட்ட மழைநீரை ஒரு ஒருங்கிணைந்த தழுவல் வழிமுறையாக (Integrated Adaptive Measure) பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பானது, வரையறுக்கப்பட்ட ஏனைய நீர் வளங்களின் பயன்பாட்டைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றது. மழைநீர் சேகரிப்பு (RWH) என்பது ஒருங்கிணைந்த நீர் வள முகாமைத்துவத்தின் முக்கியமான ஓர் அங்கமாகும். இது, பொதுநீர் வழங்கல் முறைமைகள் மற்றும் உட்கட்டமைப்புகளின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதுடன், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில் நகரங்களின் தாங்குதிறனை மேம்படுத்துகின்றது.நிலையான ஆற்றல், நீர் மற்றும் ஏனைய பசுமை உட்கட்டமைப்பு வசதிகளை நமது சமூகங்களின் மையப்பகுதிக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட நிலையான வடிவமைப்புத் தேர்வுகளின் ஓர் அங்கமாக, மழைநீர் சேகரிப்பை (RWH) கருத்திற்கொள்வது கட்டிடக் கலைஞர்கள், திட்டமிடுபவர்கள் மற்றும் வடிவமைப்பு வல்லுநர்களின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பாகும்

வெள்ள அபாயத்தைக் குறைப்பதிலும், "பசுமை" மற்றும் "நிலைபேறுடைய" வீடுகளுக்கான நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நுகர்வோர் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் மழைநீர் சேகரிப்பின் (RWH) பங்கு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்

மறுஊட்டலுக்காக (Groundwater Recharge) மழைநீரைப் பயன்படுத்துவது, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவதற்கும் நீரியல் பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் (Hydrological Vulnerability) குறைப்பதற்கும் முக்கியமான தழுவல் (adaptation) நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

நீரின் அளவும் தரமும் ஆகிய இரு அம்சங்களையும் கருத்திற்கொண்டு, மழைநீரைச் சேகரித்து பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்தும், சிறிய மற்றும் பெரியளவிலான நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் (Micro- and Macro-Watershed Systems) நீர்வளத்தைப் பாதுகாப்பதில் மழைநீர் சேகரிப்பின் (RWH) முக்கியத்துவம் குறித்தும் பொதுமக்கள், நிறுவனங்கள், கைத்தொழில்கள், சுகாதார நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

நிலவும் நீர் விநியோகத்தை அதிகரித்தல், நீரை மறுபயன்படுத்தல் மற்றும் நிலத்தடி நீர் மறுஊட்டலை மேம்படுத்தல் ஆகியவற்றுடன், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், சூழலியல் முறைமைகள் மற்றும் இயற்கை வாழிடங்கள் உள்ளிட்ட பொது நன்மைகளுக்காக மழைநீரை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில், வீட்டு மற்றும் நிறுவன மட்டங்களில் நடைமுறைப்படுத்தக்கூடிய மழைநீர் சேகரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை படிப்படியாக வகுத்துரைப்பதே இக்கொள்கையின் நோக்கமாகும். நாட்டின் நீர்வளங்களை ஒருங்கிணைந்த முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான அரசாங்கத்தின் அபிலாஷைகளுக்கு இக்கொள்கை வலுவான ஆதரவாக அமைகிறது.

## 02. கொள்கையின் அடிப்படை மற்றும் பண்புகள்

### 2.1 கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள்.

1. பாதுகாப்பு, நிலைத்தன்மை, நீர்ப் பாதுகாப்பு (தரம், அளவு, அணுகல்தன்மை மற்றும் கிடைப்புத்தன்மை), பாரம்பரிய மற்றும் நவீன அறிவு, அத்துடன் உலகளாவிய மற்றும் உள்ளூர் நடைமுறைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மழைநீர் சேகரிப்பின் (RWH) அடிப்படைக் கோட்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
2. (RWH) நிர்வாகம், நிலைபேறுடைய முறையில் நடைமுறைப்படுத்தல், தழுவல், திருத்தியமைத்தல், புனரமைத்தல், இயக்கம், பராமரிப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவை தேசிய, பிரதேச மற்றும் சமூக மட்டங்களில் உரிய நிறுவனக் கட்டமைப்புகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

3. தற்போதைய கொள்கைகள், அபிவிருத்தி இலக்குகள் (SDGs, NDCs, தேசிய இலக்குகள் போன்றவை), சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் (காணி, மண், பெருந்தோட்டம், விவசாயம், நீர்ப்பாசனம், காலநிலை மாற்றம், உட்கட்டமைப்பு, நகர மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பிலான) மற்றும் பரிணமித்து வரும் தொழில்நுட்பங்களுடன் RWH ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
4. வீட்டு, நிறுவன, வர்த்தக, கைத்தொழில் மற்றும் விவசாயப் பயன்பாடுகளுக்காகவும், நீர்த் தேவை முகாமைத்துவம், மழைநீர் வழிந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் நிலத்தடி நீர் மறுஊட்டல் மூலம் நீருக்கான அணுகலை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகளுக்காகவும் பிரயோகங்களுக்காகவும் RWH) ஊக்குவிக்கப்படுகிறது.
5. RWH மூலம் பாலின அடிப்படையிலான சமத்துவமின்மைகளுக்குத் தீர்வுகாணுதல், ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கான நீர் அணுகலை மேம்படுத்துதல் மற்றும் கிராமிய–நகர்ப்புற ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் நீர்வளங்களின் நியாயமான மற்றும் சமமான பகிர்வை ஊக்குவிக்கிறது.
6. RWH மூலம் நீர்ப் பாதுகாப்பை உறுதிசெய்வதுடன், மழைநீர் வழிந்தோட்ட முகாமைத்துவத்தை மேம்படுத்துதல், மண் அரிப்பு மற்றும் நிலச் சீரழிவைக் குறைத்தல், அத்துடன் நகர வெப்பத் தாக்கங்களின் (Urban Thermal Pollution) விளைவுகளைத் தணித்தல் ஆகியவற்றின் மூலம் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறனை வலுப்படுத்துகிறது.
7. RWH மூலம் புதிய நிதியளிப்பு பொறிமுறைகளை உருவாக்குதல், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பராமரிப்பு கிரயத்தினை உகந்த முறையில் முகாமைத்துவம் செய்தல், நீர் விநியோகச் சேவைகள் தொடர்பான பொருளாதார இழப்புகளைக் குறைத்தல், அத்துடன் தேசிய, பிரதேச மற்றும் சமூக மட்டங்களில் திட்டமிடல், வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கான திறன் மேம்பாட்டின் மூலம் நீர்வள முகாமைத்துவத்தின் பொருளாதாரச் சாத்தியத்தன்மையையும் நிலைத்தன்மையையும் மேம்படுத்துகிறது.
8. RWH மூலம் ஆற்றல் நுகர்வைக் குறைத்தல், வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் இயற்கைச் சூழலியல் முறைமைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட மற்றும் இயற்கைச் சூழல்களில் One Healt அணுகுமுறையை ஊக்குவிக்கிறது.

## 2.2 கொள்கைப் பிரகடனம்

நீர்ப் பாதுகாப்பு, காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறன் (Climate Resilience) மற்றும் சூழலியல் நிலைத்தன்மையை மேம்படுத்தும், நீர்வள முகாமைத்துவத்திற்கான நிலைபேறான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையாக மழைநீர் சேகரிப்பு (RWH) அடையாளம்

காணப்பட்டுள்ளது. இது பாதுகாப்பு, சமத்துவமான பகிர்வு, அத்துடன் பாரம்பரிய மற்றும் நவீன அறிவு ஆகிய இரண்டையும் பயன்படுத்துதல் போன்ற கோட்பாடுகளால் வழிநடத்தப்படுவதுடன், நிலவும் நிறுவன, சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த அணுகுமுறை வீட்டு, விவசாய, வர்த்தகப் பயன்பாடுகள் மற்றும் நிலத்தடி நீர் மறுஊட்டல் உள்ளிட்ட பல்வேறு நீர் தேவைகளுக்கு ஆதரவளிப்பதுடன், தேசிய மற்றும் உலகளாவிய அபிவிருத்தி முன்னுரிமைகளுடனும் ஒத்திசைவாக அமைகிறது. இது குறிப்பாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கான நியாயமான நீர் அணுகலை ஊக்குவிப்பதோடு, மேம்படுத்தப்பட்ட மழைநீர் வழிந்தோட்ட முகாமைத்துவம், சூழலியல் சீரழிவைக் குறைத்தல் மற்றும் சூழலியல் முறைமைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் காலநிலைத் தழுவலுக்குப் பங்களிக்கிறது.கிரய பயனுறுதி மிக்க முதலீடுகள், புதிய நிதியளிப்பு பொறிமுறைகள் மற்றும் மனித நல்வாழ்வு, வாழ்வாதாரங்கள் மற்றும் சூழலியல் ஆகியவற்றின் தொடர்ச்சியான தொடர்புகளை வலியுறுத்தும் (One Health) அணுகுமுறைக்கும் இக்கொள்கை முக்கியத்துவம் அளிக்கிறது.மேலதிக குடிநீர் மூலமாக மழைநீர் சேகரிப்பை ஊக்குவிப்பதன் மூலம், உலர் வலயத்தில் குடிநீர்த் தேவையின் குறைந்தபட்ச சராசரியாக 30% அளவையும், ஈர வலயத்தில் குறைந்தபட்ச சராசரியாக 15% அளவையும் பூர்த்தி செய்வதை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 2.3 கொள்கை நோக்கங்கள்

**நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்:**
தேசிய கொள்கைகள், அபிவிருத்தி இலக்குகள் மற்றும் துறைசார் உத்திகளுடன் இணக்கமான முறையில் செயல்படுவதை உறுதிசெய்ய, மழைநீர் சேகரிப்பிற்கான (RWH) பயனுறுதிவாய்ந்த நிறுவன, சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளை நிறுவி வலுப்படுத்துதல்.

**நீர்ப் பாதுகாப்பை மேம்படுத்துதல்:**
வீட்டு, விவசாய, கைத்தொழில் மற்றும் நிலத்தடி நீர் மறுஊட்டல் உள்ளிட்ட **பன்முகப்** பயன்பாடுகளுக்காக நீர்வளங்களின் பயன்பாட்டுத் திறன், தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கான நிலைபேறான தீர்வாகவும், பாரம்பரிய நீர் மூலங்கள் மற்றும் நீர் வழங்கல் முறைமைகளை அணுகுவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் பகுதிகளில் மாற்று நீர் மூலமாகவும் மழைநீர் சேகரிப்பை (RWH) ஊக்குவித்தல்.

**சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய அணுகலை ஊக்குவித்தல்:**
பாலின அடிப்படையிலான சமத்துவமின்மைகளுக்குத் தீர்வுகாணுதல், ஓரங்கட்டப்பட்ட மற்றும்

பாதிப்புக்குள்ளாகக்கூடிய சமூகங்களுக்கு ஆதரவளித்தல், அத்துடன் கிராமிய–நகர்ப்புற ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் மழைநீர் சேகரிப்பு (RWH) வாயிலாக நீருக்கான நியாயமான மற்றும் சமமான அணுகலை உறுதிசெய்தல்.

**காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறன் மற்றும் சூழலியல் நிலைத்தன்மையை வலுப்படுத்துதல்:**
மழைநீர் வழிந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுடன் மழைநீர் சேகரிப்பை (RWH) ஒருங்கிணைத்தல், மண் அரிப்பு மற்றும் நிலச் சீரழிவைக் குறைத்தல், அத்துடன் சூழலியல் முறைமைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறனை வலுப்படுத்துதல்.

**முதலீடுகளை உகந்ததாக்குதலும் நிலையான முறைமைகளுக்கு ஆதரவளித்தலும்:**
மழைநீர் சேகரிப்பிற்கான (RWH) கிரய செயற்திறனுள்ள மற்றும் புது நிதியளிப்பு பொறிமுறைகளை ஊக்குவித்தல், செயல்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல், முறைமையின் செயற்திறனை மேம்படுத்துதல், அத்துடன் நிலையான வாழ்வாதாரங்களுக்குப் பங்களித்தல் மற்றும் பாரம்பரிய நீர் விநியோக முறைமைகளுக்கான தேவையைக் குறைத்தல்.

## 2.4 கொள்கை இலக்குகள்

- தேசிய மற்றும் உலகளாவிய கடப்பாடுகளை வலுப்படுத்துதல்
- நீர்த் தேவை, நீர் பயன்பாடு மற்றும் பொருளாதாரச் செயற்திறனை உகந்த முறையில் முகாமைத்துவம் செய்தல்
- நிலைபேறான சூழலியல் முறைமைகள், சமூகங்கள் மற்றும் One Health முன்முயற்சிகளை உறுதிப்படுத்துதல்
- காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறன் மற்றும் பசுமை விளைவுகளை (Green Outcomes) மேம்படுத்துதல்
- சுயசார்பை (Self-Reliance) மேம்படுத்துவதற்காக நீர்ப் பாதுகாப்பை பன்முகப்படுத்துதல்

## 03.கொள்கையின் நோக்கெல்லை மற்றும் பொருத்தப்பாடு

கொள்கையின் நோக்கெல்லையானது, தேசிய, பிரதேச மற்றும் சமூக மட்டங்களில் நிலத்தடி நீர் மறுஊட்டல் மற்றும் மழைநீர் வழிந்தோட்ட முகாமைத்துவம் உள்ளிட்ட வீட்டு, நிறுவன, வர்த்தக, கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளில் மழைநீர் சேகரிப்பு (RWH) முறைமைகளின் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்தை உள்ளடக்கியதாகும். இது நிலவும் சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்புகளுக்கு அமைவாக செயற்படுவதுடன், தேசிய மற்றும்

உலகளாவிய அபிவிருத்தி முன்னுரிமைகளுடனும் ஒத்திசைவாக அமைகிறது. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் காலநிலைத் தழுவல் உத்திகளுடன் மழைநீர் சேகரிப்பை (RWH) ஒருங்கிணைப்பதன் மூலம், அனைவருக்கும் சமமான நீர் அணுகலை உறுதிசெய்து, நீர்ப் பாதுகாப்பு, சூழலியல் நிலைத்தன்மை மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவதற்காக பாரம்பரிய மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் இரண்டினதும் பயன்பாட்டை இக்கொள்கை ஊக்குவிக்கிறது. மேலும், நீர் முகாமைத்துவத்தை சூழலியல் முறைமைகளின் ஆரோக்கியம், ஆற்றல் செயற்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரங்களுடன் இணைக்கும் முழுமையான “One Health”, அணுகுமுறைக்கும் இக்கொள்கை ஆதரவளிக்கிறது. இது புதிய நிதியளிப்பு பொறிமுறைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, திறன்வாய்ந்த இயக்கம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள், அத்துடன் தொடர்ச்சியான கண்காணிப்பு ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. மேலும், “One Health”,அணுகுமுறையானது மனிதன்–விலங்கு–தாவரம்–சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புகளில் காணப்படும் சவால்களை எதிர்கொள்வதற்கும், டெங்கு போன்ற நீருடன் தொடர்புடைய நோய்கள் உட்பட புதிதாகத் தோன்றும் மற்றும் பரவலாகக் காணப்படும் விலங்குவழி (Zoonotic) நோய்களினால் ஏற்படும் பொதுச் சுகாதார அபாயங்களைக் குறைப்பதற்கும் வலுவான தீர்வை வழங்குகிறது

**மழைநீர் சேகரிக்கும் (RWH) கொள்கை;**

RWH கொள்கையானது;

- வீட்டு, நிறுவன, விவசாய, கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் நாடு தழுவிய ரீதியில் பொருந்தும்,
- நிலத்தடி நீர் மறுஊட்டல், கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பயன்பாடு போன்ற உயர் பெறுமதிமிக்க பயன்பாடுகளுக்காகவும், நகரப் பகுதிகளில் உள்ள பொதுக் கட்டிடங்கள் மற்றும் இடங்களில் பிரபல்யப்படுத்துதல், மற்றும் மழைநீர் வழிந்தோட்ட முகாமைத்துவம் உள்ளிட்ட பன்முகப் பயன்பாடுகளுக்கான ஏற்பை ஊக்குவிக்கிறது,
- நீர்ப் பற்றாக்குறை உள்ள, அதிக தேவையுள்ள மற்றும் குறைந்த நீர்த் தரம் கொண்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னுரிமையளிக்கிறது,
- வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் சூழலியல் முறைமைகளின் நிலைத்தன்மை ஆகியவற்றுக்குத் தீர்வுகாண்பதற்காகத் நாடு பூராவுமுள்ள சூழலுக்கு ஏற்ற பிரயோகங்களை ஆதரிக்கிறது,
- புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக மழை நிரைச் சேகரித்தல் RWH முறைமைகளை ஒருங்கிணைப்பை கட்டாயமாக்குவதுடன், ஊக்குவிப்புகள், ஒழுங்குமுறைகள் மற்றும்

தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் மூலம் ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் அக்குறித்த முறைமைகளை மீள் பொருத்துதல் (retrofitting) ஊக்குவிக்கிறது,

- திட்டமிடல் மற்றும் நீர்வள முகாமைத்துவத்தில் ஈடுபடும் அனைத்து உரிய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் பிரதான செயற்பாட்டு அணுகுமுறைகளில் (Mainstream) இதனை ஒருங்கிணைப்பதை முதன்மைப்படுத்துகிறது.
- இடத்திலேயே (in-situ) மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள், அத்துடன் நிலத்தடி நீர் மறுஊட்டல் / நிர்வகிக்கப்படும் நீர்நிலை மறுஊட்டல் (MAR) நடைமுறைகளை வலுப்படுத்துகிறது,
- துறைகள் முழுவதும் நீர் பயன்பாட்டுச் செயற்திறன், காலநிலை எதிர்கொள்ளும் திறன் மற்றும் ஒட்டுமொத்த நிலையான தன்மையை உயர்த்துவதற்குப் பாரம்பரிய மற்றும் புதுமையான அணுகுமுறைகள் இரண்டினதும் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது, அத்துடன்
- மழைநீரை விரைவாக வெளியேற்றும் வழக்கத்திலிருந்து விலகி, நீரைத் தேக்கி வைப்பதற்கும் நிலையான முறையில் முகாமைத்துவம் செய்வதற்குமான ஒரு முன்னுதாரண மாற்றத்தை (paradigm shift) ஊக்குவிக்கிறது

## 04. நடைமுறைப்படுத்துவதற்கான உத்திகள்

- தொடர்புடைய அனைத்து தரப்பினரின் பங்கேற்பு மற்றும் ஒருங்கிணைப்புடன், நீர் வழங்கலுக்குப் பொறுப்பான அமைச்சினால் மழைநீர் சேகரிப்புக் (RWH) கொள்கையின் குறிக்கோள்கள் எட்டப்படுகின்றனவா என்பதைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்தல்.
- புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்களில் மழைநீர் சேகரிப்பை (RWH) கட்டாயமாக்குவதுடன், நிலவும் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளில் அப்போதைய முறைமைகளை மீள்பொருத்தலை (Retrofitting) ஊக்குவித்தல்; அத்துடன் கொள்கைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் கட்டிடக் குறியீடுகளில் (Building Codes) மழைநீர் சேகரிப்பை (RWH) ஒருங்கிணைப்பதன் மூலம் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்துதல்.
- நிலவும் மற்றும் கைவிடப்பட்ட மழைநீர் சேகரிப்பு முறைமைகளைப் புனரமைப்பதுடன், நீர் வழங்கல், நகரத் திட்டமிடல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தித் திட்டங்களில் மழைநீர் சேகரிப்பை (RWH) ஒருங்கிணைத்தல்.
- பயனுறுதிவாய்ந்த நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பின் ஆதரவுடன், ஊக்குவிப்பு நடவடிக்கைகள், நிதியளிப்புப் பொறிமுறைகள் மற்றும் நீர்த் தரக் கண்காணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய முறையான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமைகளை உருவாக்குதல்.
- கிடைக்கக்கூடிய பயிற்றுநர்களுக்கான "பயிற்றுநர்களைப் பயிற்றுவிக்கும்" (ToT) நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சிப் பொருட்களை இற்றைப்படுத்துதல்; சான்றிதழ் பெற்ற

மாவட்டப் பயிற்றுநர் வளக் குழுக்களை நிறுவுதல்; அத்துடன் கல்வி மற்றும் தொழிற்கல்விப் பாடநெறிகளில் மழைநீர் சேகரிப்பை (RWH) ஒருங்கிணைப்பதன் மூலம் கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் சான்றிதழ் வழங்கல் ஊடாக தொழில்நுட்பத் திறனை கட்டியெழுப்புதல்.

- நீர்ப்பிடிப்பு (Catchment), கொண்டுசெல்லல் (Conveyance), வடிகட்டல் (Filtration), சுத்திகரிப்பு (Treatment) மற்றும் சேமிப்பு (Storage) ஆகிய கூறுகளை உள்ளடக்கிய மழைநீர் சேகரிப்பு (RWH) முறைமைகள் முறையாக வடிவமைக்கப்பட்டு, நிறுவப்பட்டு, பராமரிக்கப்படுவதை உறுதிசெய்தல்.

- தொழில்நுட்ப ஆதரவு முறைமைகள் மற்றும் தகவல் மையங்களை நிறுவுதல்; வழிகாட்டுதல்கள், கையேடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பரவலாகப் பரப்புதல்; மழைநீர் சேகரிப்பு முறைமைகளின் வடிவமைப்பு, பொருத்தப்பாடு மற்றும் SOP தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய தேசிய மழைநீர் சேகரிப்பு வடிவமைப்புக் கையேட்டை வெளியிடுதல்; அத்துடன், மழைநீர் சேகரிப்பு முறைமைகளின் பயன்பாட்டை விரிவுபடுத்தவும், நீர் பயன்பாட்டுச் செயற்திறனை மேம்படுத்தவும், தனியார் துறை, அபிவிருத்தியாளர்கள், தொழிற்சாலைகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு முறைமைக் கூறுகளின் உற்பத்தியாளர்களுடன் கூட்டாண்மைகளை உருவாக்குதல்.

- மழைநீர் சேகரிப்பு முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் தொடர்பாக உரிய NVQ சான்றிதழ்களை வழங்குவதன் மூலம், பிரதேச மட்டத்தில் உள்ள கொத்தனார்கள், தச்சர்கள், தொழில்நுட்பக் கைவினைஞர்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துதல்; அத்துடன் நிறுவப்பட்ட மாவட்ட வளக் குழுக்கள் தொடர்பான தகவல்களைப் பரவலாக வெளியிடுதல்.

- பல்வேறு பயனர் குழுக்களின் தேவைகளுக்கு ஏற்ற, பயன்படுத்துவதற்கு எளிதான மழைநீர் சேகரிப்பு (RWH) தொழில்நுட்பங்கள் மற்றும் முறைமைகளின் புத்தாக்கம், தரப்படுத்தல் மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்தல்.

- பல்வேறு மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளைத் துல்லியமாக மதிப்பீடு செய்து ஆவணப்படுத்துவதற்கும், அவற்றை பரவலாகப் பரப்புவதற்கும் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளுக்கு ஆதரவளித்தல்.

- பரிந்துரையிடல் (Advocacy), வெளிக்களத் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்கள் (Outreach Programmes), மற்றும் பிரதேச நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றுடனான செயற்பாட்டு ஈடுபாட்டின் மூலம் பொதுமக்கள் விழிப்புணர்வையும் சமூகப் பங்கேற்பையும் மேம்படுத்துதல்.

- நீர் வழங்கல் மற்றும் நிலத்தடி நீர் மறுஊட்டலை மேம்படுத்துவதற்காக, பாரம்பரிய முறைமைகள் (எ.கா., வாவிகள், குளங்கள், பதஹக்கள், நீர்வீழ்ச்சிகள், தோண்டப்பட்ட கிணறுகள்) மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் (எ.கா., மழைநீர் சேகரிப்புக் குழிகள், பயோஸ்வேல்கள் (Bioswales), சுவால்கள் (Swales), சமஉயர வடிகால்கள் (Contour Drains),

துளையிடப்பட்ட வடிகால்கள் (Perforated Drains)) ஆகியவற்றை இணைக்கும் ஒருங்கிணைந்த நீர்வடிகால் முகாமைத்துவ அணுகுமுறைகளை ஊக்குவித்தல்.

- நீர் தேங்கி நிற்பதைத் தடுப்பதுடன், மழைநீர் சேகரிப்பு முறைமைகள் நோய்க்காவிகள் உட்புகவோ இனப்பெருக்கம் செய்யவோ முடியாத வகையில் முறையாக மூடப்பட்டும் பராமரிக்கப்பட்டும் இருப்பதை உறுதிசெய்து, நோய்க்காவிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல்.

## 05. <u>தரப்பினர்கள்</u>

இலங்கை மழைநீர் சேகரிப்பு மன்றம் (LRWHF), உரிய நிரல் அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், மழைநீர் சேகரிப்பு முறைமைக் கூறுகளின் உற்பத்தியாளர்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs), அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), சர்வதேச மன்றங்கள், அபிவிருத்திப் தரப்பினர்கள்,, சமுதாயஞ்சார்ந்த அமைப்புகள், கைத்தொழில் மற்றும் விவசாய நிறுவனங்கள், அரச, தனியார் மற்றும் மத நிறுவனங்கள், அத்துடன் அனைத்து வீடுகளும் மற்றும் நிறுவனங்களும் இக்கொள்கையின் தரப்பினர்களாகச் செயற்பட வேண்டும். மேலும், மழைநீர் சேகரிப்பை முழு நாட்டினதும் கூட்டுப் பொறுப்பாக மாற்றுவதற்கு அனைவரும் பங்களிக்க வேண்டும்.

## 06. சட்டவாக்க ஆதரவு

– நிலவும் மற்றும் எதிர்காலக் கட்டிட நிர்மாணங்கள் இரண்டிலும், உள்ளூர் மட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாடு, மண்ணுக்குள் நீர் ஊடுருவலை மேம்படுத்துதல் மற்றும் சுகாதார நிலையை உயர்த்துதல் ஆகியவற்றிற்கான ஒரு உத்தியாக மழைநீர் சேகரிப்பை (RWH) ஒருங்கிணைப்பதற்காக, வடிகால் தொடர்பான மாநகர சபை / நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) துணை விதிகளைத் திருத்துதல்.

– எதிர்காலத்தில் நிர்மாணிக்கப்படும் புதிய கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு (RWH) முறைமைகளை உள்ளடக்குவதை கட்டிட அனுமதி விண்ணப்பத்தின் கட்டாயத் தேவைகளில் ஒன்றாகச் சேர்த்தல்; அத்தகைய முறைமைகள் நிறுவப்பட்டிருப்பதை 'இணக்கச் சான்றிதழ்' (Certificate of Conformity - CoC) வழங்குவதற்கான நிபந்தனையாகக் கருதுதல்; மேலும், அவ்வாறான மழைநீர் சேகரிப்பு வசதிகளைக் கொண்ட கட்டிடங்களுக்கு வருடாந்த சோலை வரியில் சலுகைகள் வழங்குவதற்காகத் தேவையான துணை விதிகளைத் திருத்துதல்.

- மண்ணுக்குள் நீர் ஊடுருவுவதை மேம்படுத்தும் நோக்கில், வீதி நிர்மாணங்களின்போது மென் நடைபாதைகள் (soft paving), சுவால்கள் / பயோஸ்வேல்கள் (swales/bioswales), மற்றும் நீர் ஊடுருவக்கூடிய வடிகால்கள் (porous drains) ஆகியவற்றை அமைப்பதற்கு இடமளிக்கும் வகையில், வடிகால் தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) துணை விதிகள் திருத்தப்படுதல்.
- ஏனைய பாரம்பரிய நீர் மூலங்களுக்குச் சமமான அந்தஸ்துடன், மழைநீர் சேகரிப்பை (RWH) வீட்டு நீர் வழங்கல் மூலமாக அங்கீகரித்து உள்ளடக்குவதற்காக, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (NWSDB) துணை விதிகளைத் திருத்துதல்
- திருத்தப்பட்ட மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) துணை விதிகளின் கீழ் கட்டாயமாக்கப்படும் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, மழைநீர் முகாமைத்துவம் தொடர்பான ஏற்பாடுகளையும் உள்ளடக்குவதற்காக, அடுக்குமாடி வீட்டு உரிமையுடைமைச் சட்டத்தை (Apartment Ownership Act) திருத்துதல்
- நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) 2021 ஆம் ஆண்டின் 2235/54 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம், 1,000 சதுர மீட்டருக்கு மேற்பட்ட புதிய கட்டிடங்களுக்கு (தொழில்துறைக் கட்டமைப்புகளைத் தவிர )பசுமைக் கட்டிடச் சான்றிதழ் (Green Building Certification) பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இச்சான்றிதழ் வழங்கும் செயல்முறையில், நீர்ப் பாதுகாப்பு, பசுமைப் புத்தாக்கம் (Green Innovations) மற்றும் மழைநீர் சேகரிப்பு (RWH) தொடர்பான அம்சங்களும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.
- ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான பருவமைப்பு மாநாட்டிற்கு (UNFCCC) சமர்ப்பிக்கப்படும் மூன்றாவது தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு (NDC 3.0) மற்றும் நீர்த் துறைக்கான தேசிய தழுவல் திட்டம் (NAP) உள்ளிட்ட காலநிலை தொடர்பான கொள்கைகளின் ஊடாக, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளும் திறனுடைய ஒரு தீர்வாக மழைநீர் சேகரிப்பை (RWH) ஊக்குவித்தல்.